பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் திருவிழாவின் போது. பொது நிலையினர் பணிப் பேரவை சார்பில் செப்டம்பர் 21, 2024 அன்று நடந்த பொதுக்கூட்டத்தில் மக்கள் நலப் பணியாளர்கள் 10 பேர் கௌரவிக்கப்பட்டனர். மறை மாவட்ட இயக்குனர் அருட்தந்தை. வினு டி ஜோசப் அனைவருக்கும் நினைவு பரிசு வழங்கினார். அருட்தந்தை அஜின் ஜோஸ் அவர்கள் கௌரவ பதக்கம் வழங்கினார். அருட்சகோதரி அமலா அனைவருக்கும் பரிசு வழங்கினார். சூசைபுரம் மறைவட்ட தலைவர் திரு சாம்ராஜ் வாழ்த்துரை வழங்கினார். நிகழ்வுகளை ஆலய பொதுநிலையினர் பணிக்குழு தலைவர் திரு S. அருள் ஏற்பாடு செய்திருந்தார். இந்நிகழ்வில் உறுப்பினர்கள் மற்றும் பங்கு மக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



திரு. தனசிங், தலைவர்,
பொதுநிலையினர் பணிக்குழு

| FEASTDAY OF REV. FATHERS-DECEMBER- 2024 | |
|---|---|
| FR. ABILASH XAVIER RAJ S | 03 |
| FR. JOHN JOSEPH | 27 |
| FR. JOSHY KULATHUMKAL | 27 |
| FR. SUBIN SCARIA PUTHENPURACKAL | 27 |




மருத்துவ ஆலோசனை அளிப்பதற்காக Dr. ராபின் அவர்கள் நவம்பர் 04, அன்று, இல்வாழ்வு இயக்கத்திற்கு வருகை தந்திருந்தார். நவம்பர் 19, 26 இல்வாழ்வு இயக்கத்தின் பணியாளர்கள் காரோடு தேவசகாயம் நலவாழ்வு நிலையத்தில் இருக்கும் நோயாளிகளை ஆற்றல் படுத்துவதற்காக சென்றனர். நவம்பர் 3, 10 ஆகிய நாட்களில் மாதர் ஜோதிஸ் இயக்கத்தை ஒவ்வொரு மறைவட்ட இயக்குநர் தந்தை மற்றும் பொறுப்பாளர்கள் அலகுகளை பார்வையிட்டு வழிநடத்தினார்கள்.

**பார்வையிடப்பட்ட அலகுகள்**

**ஆறுகாணி மறைவட்டம்**

1. ஆறுகாணி 2. நெட்டா 3. மேழக்கோடு 4. பத்துகாணி 5. பேணு

**மஞ்சாலுமூடு மறைவட்டம்**

1. மஞ்சாலுமூடு 2. மாலைக்கோடு 3. முக்கூட்டுக்கல் 4. முழுக்கோடு

5. தெற்றிவிளை 6. பென்கிரி

**படந்தாலுமூடு மறைவட்டம்**

1. தெற்றியோடு 2. அதங்கோடு 3. கழுவன்திட்டை 4. அண்ணிக்கரை

**களியல் மறைவட்டம்**

1. களியல் 2. சேனங்கோடு

**தக்கலை பிலாங்காலை மறைவட்டம்**

1. நாகர்கோவில்

நவம்பர் 03, அன்று மஞ்சாலுமூடு மறைவட்ட பொறுப்பாளர்களின் கூடுகை மறைவட்ட இயக்குநர் அருட்தந்தை. ஜோஸ் வயலில் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. நவம்பர் 20, அன்று மறைமாவட்ட பொறுப்பாளர்களின் கூடுகை இல்வாழ்வு இயக்க அலுவலகத்தில் மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை. முனைவர் ஜிம்மி தெக்கேகடுமத்தில் தலைமையில் நடைபெற்றது. நவம்பர் 24, அன்று மாஷப் நடனப் போட்டி படந்தாலுமூடு மறைவட்ட ஆலயத்தில் நடைபெற்றது. 20 குழுக்கள் போட்டியில் கலந்து கொண்டனர். மூன்று பிரிவுகளாக பரிசுகள் வழங்கப்பட்டது.

A - Category (புனித குழந்தை தெரசா ஆலயம் மஞ்சாலுமூடு -I புனித தோமையார் ஆலயம் மாறப்பாடி - II திருக்குடும்ப ஆலயம் தக்காளிவிளை -II)

B - Category (புனித குழந்தை தெரசா ஆலயம் பள்ளிகோணம் -I திருக்குடும்ப ஆலயம் ஆறுகாணி -II)

C- Category (புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயம் வாறுதட்டு -I புனித மேரி ஆலயம் களியல்-II )




அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்
இயக்குநர்




# வின்சென்ட்-தே-பவுல் சபை

2024, செப்டம்பர் 18, மாலை 5.00 மணிக்கு தக்கலை மத்திய பேரவையின் கீழ் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனை அருகே அமைந்துள்ள "விடியல் அருள் அவை நடுவம் (VAAN)" என்ற கட்டிடத்தில் விடியல் நலவாழ்வு மையத்தை தக்கலை மறைமாவட்டத்தின் முதல் ஆயரும், மேனாள் சீரோமலபார் திருச்சபையின் உயர் பேராயருமான மார் ஜார்ஜ் கர்தினால் ஆலஞ்சேரி



ஆண்டகை அவர்கள் ஏழை எளிய மக்களின் பயன்பாட்டுக்காக அர்ப்பணித்து வைத்தார்கள். இந்த சிறப்பு மிக்க நிகழ்வு மத்திய சபையின் ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துபறம்பில் அடிகளார், மத்திய பேரவை தலைவர் சகோதரர் றாபி, துணைத்தலைவர் சகோ. ஐயாத்துறை நிறுவனத்தின் ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை சணல் அடிகளார் மற்றும் அருட்தந்தையர்கள் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது. 100க்கு மேற்பட்ட அன்புள்ளம் கொண்ட வின்செந்திய சகோதரர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

தகவல் சேகரிப்பு,
திரு. ஷாஜி D.P.

| BIRTHDAY OF REV. FATHERS - DECEMBER- 2024 | |
|---|---|
| FR. JOSE KANICHIKUZHIYIL | 03 |
| FR. ALEX PUTHETTU | 16 |
| FR. JOSEPH ANITHOTTAM CMI | 18 |
| FR. ANTONY JOSE | 18 |
| FR. MATHEUS ROBERT | 26 |

# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

## “வீட்டில் தோட்டம்“

பிலாங்கரை, சுய உதவிக் குழுக்கள் சார்பில் பிலாங்கரை, லொரேட்டோ மாதா ஆலய வளாகத்தில் "வீட்டில் தோட்டம்" குறித்த பயிற்சி வகுப்பு நவம்பர் 9 தேதி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு பேரா. கேம்லெட் அவர்கள் "வீட்டில் தோட்டம்”என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். அவர் பின்வரும் கருத்துக்களை முன்வைத்துப் பேசினார்.

வீட்டின் பின்புறத்தில் அல்லது வீட்டில் அதற்கென தனி இடம் அமைத்து நம் அம்மாக்கள் தோட்டத்தை பராமரிப்பதை பார்த்திருப்போம். வீட்டில் தோட்டம் அமைப்பதால் அதில் இருந்து கிடைக்கும் நன்மைகள் பல. ரசாயனம் சேர்க்கப்படாமல் இயற்கை முறையில் வீட்டிலேயே பெறப்படும் இந்த முறையை கிச்சன் கார்டன் (Kitchen Garden) என்கிறோம். இந்த கிச்சன் கார்டெனில் நாம் துளசி, கற்பூரவல்லி, மணத்தக்காளி, கீரை, சோற்றுக்கற்றாழை, புதினா போன்றவற்றை மட்டும் வளர்க்காமல் காய்கறிகளையும் வளர்க்கலாம். எந்த ரசாயன ஊக்கிகளையும், பூச்சி கொல்லிகளையும் இடாமல் வீட்டில் பெறப்படும் சமையல் கழிவுகள், காய்கறி கழிவுகள் போன்ற இயற்கை பொருட்களை கொண்டே நன்கு தோட்டத்தை பராமரிக்கலாம். இதனால் உடலுக்கு எந்த தீங்கும் ஏற்படாது. தோட்டத்திற்கு நல்ல பராமரிப்பு இருந்தால் மட்டும் போதும். மேலும் அவர், காய்கறி தோட்டத்தின் அளவு மற்றும் வடிவம் சமையலறை தோட்டத்தின் அமைப்பு சமையலறை தோட்டம் பராமரிப்பு நீர்ப்பாசனம் குறித்தும் விளக்கினார். இதில் 60க்கும் மேற்பட்ட சுய உதவிக் குழு பெண்கள் பங்கேற்றனர்.

## C.L.F கூட்டம்

மாறப்பாடி மையத்தின் சுயஉதவிக் குழுக்களின் C.L.F கூடுகை 08-11-2024 அன்று புனித தோமையார் ஆலயத்தில் வைத்து களப்பணியாளர் திருமதி. ராஜம் தலைமையில் நடைபெற்றது. இதில் புதிய C.L.F பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். கூட்டத்தில் கிறிஸ்துமஸ் குழுக்களின் செயல்பாடுகள் குறித்து விவாதித்தனர். C.L.F கூட்டத்தில் கிறிஸ்துமஸ் விழா பற்றி விவாதிக்கப்பட்டது. அதில் கிறிஸ்துமஸ் விழா டிசம்பர் 20ஆம் தேதி நடத்தலாம் எனவும், அடுத்த கூட்டமானது 7 பிப்ரவரி நடைபெறும் எனவும்,

தீர்மானிக்கப்பட்டது. இதில் 6 குழுக்களை சார்ந்த 45 நபர்கள் கலந்துகொண்டனர்.

## KKSSSஇல் ஓவியப்போட்டி

குழந்தைகளின் ஓவியத் திறனை வெளிக்கொணர குழந்தைகள் தினத்தையொட்டி கன்னியாகுமரி சமூகசேவை சங்கத்தால் மாவட்ட அளவிலான ஓவியபோட்டி மற்றும் சுவரொட்டி வடிவமைத்தல் போட்டி நடைபெற்றது. "வர்ணம் 2024" என்று பெயரிடப்பட்ட அந்நிகழ்வு, நவம்பர் மாதம் 08- ம் தேதியன்று கல்லுவிளை ஆசிர் அரங்கத்தில் வைத்து நடைபெற்றது.

தொடக்க விழாவினை கருங்கல், அல்போன்சா கலை கல்லூரி முதல்வர் முனைவர் அருட்தந்தை ஆரோக்கியசாமி அவர்கள் குத்துவிளக்கேற்றி துவங்கி வைத்தார். KKSSS இன் இயக்குநர் தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் சிறப்புரையாற்றினார். IV முதல் VI வகுப்புவரை "என் கனவு" என்ற தலைப்பில் ஓவியம் வரைதல் போட்டியும் VII முதல் X வகுப்பு வரை "மீனவரின் வாழ்க்கை"என்ற தலைப்பில் வர்ணம் தீட்டுதல் போட்டியும் நடைபெற்றது. இரு பிரிவுகளில் நடைபெற்றப் போட்டியில் 35 பள்ளிகளை சேர்ந்த 525 மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். மாணவர்களுக்கு "போதை விழிப்புணர்வு" மைய சிந்தனையில் அருட்தந்தை.பிரான்சிஸ் சேவியர் நெல்சன் (இயக்குநர், ஆற்றுப்படுத்தல் பணி-நாகர்கோவில்) அவர்களால் ஒருமணிநேரம் விழிப்புணர்வு கருத்துரையாடல் நடைபெற்றது.

## விருதுவழங்குதல்

போட்டி நிறைவு விழாவில் கன்னியாகுமரி சமூக சேவை சங்க இயக்குநர் தந்தை வாழ்த்துரை வழங்கி பரிசு விவரங்களை அறிவித்தார். விழாவிற்கு சிறப்பு விருந்தினராக முளகுமூடு பேரூராட்சி தலைவி திருமதி ஜெனிஷா அஜித் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றி வெற்றி பெற்ற குழந்தைகளை பாராட்டி பரிசினை வழங்கினார்கள். ஓவியம் வரைதல் போட்டியில் கழுவந்திட்டை,



S.H மேல்நிலைப்பள்ளி மாணவி முதல் பரிசையும் வர்ணம் தீட்டுதல் போட்டியில் சூசைபுரம், A.P.J.M மேல்நிலைப்பள்ளி மாணவி முதல் இடத்தையும் பெற்றனர். இரு போட்டிகளிலும் முதல் 10 இடங்களில் வெற்றி பெற்றவர்களுக்கும் பரிசு வழங்கப்பட்டது. இறுதியாக துணை இயக்குநர் தந்தை சுபின் ஸ்கரியா அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார். இந்த நிகழ்வில் ஆசிரியர்கள், பெற்றோர்கள் பொதுமக்கள் என ஏராளமானவர்கள் கலந்துகொண்டனர். இந்நிகழ்வை கன்னியாகுமரி சமூகசேவை சங்கத்தினர் இணைந்து செயல்படுத்தினர்.

## வாழ்க்கை முறை நோய்கள் மற்றும் மன அழுத்தங்கள்

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் சேனம்கோடு, சுய உதவிக் குழு சார்பில்"வாழ்க்கை முறை நோய்கள் மற்றும் மன அழுத்தங்கள்" குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி 2024 நவம்பர் 13 அன்று குலசேகரம், வெண்டலிக்கோட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சியின் தலைமை விருந்தினராக முகாம்பிகா மருத்துவ மையத்தின் டாக்டர் ஷாலினி அவர்கள் பங்கேற்று பயிற்சி அளித்தார். அவர் கூறியது; மன அழுத்தம் நம்மை உணர்ச்சி ரீதியாக மோசமாக உணர வைப்பது மட்டுமல்லாமல், நீங்கள் நினைக்கும் எந்தவொரு சுகாதார நிலையையும் மோசமாக்கலாம். மன அழுத்தம் தொடர்பான பல உடல்நலப் பிரச்சினைகள் இருப்பதாக ஆய்வுகள் கண்டறிந்துள்ளன. மன அழுத்தம் உடல் பருமன், இதய நோய், அல்சர் நோய், நீரிழிவு நோய், மனச்சோர்வு, இரைப்பை குடல் பிரச்சினைகள் மற்றும் ஆஸ்துமா போன்ற நிலைமைகளின் அபாயத்தை மோசமாக்குகிறது அல்லது அதிகரிக்கிறது. கவலை அல்லது மனச்சோர்வை அனுபவிப்பது நன்றாக சாப்பிடுவதை கடினமாக்கலாம் ஆனால் உங்கள் மன நலனுக்கு நல்ல ஊட்டச்சத்து அவசியம். ஒரு ஆரோக்கியமான வாழ்க்கை முறை ஒருவரின் மன ஆரோக்கியத்திற்கு நன்மை பயக்கும். எனவே, உளவியல், நல்வாழ்வை ஊக்குவிக்கும் மற்றும் மனநலப் பிரச்சினைகளைக் குறைக்கும் ஆரோக்கியமான வாழ்க்கை முறை தேர்வுகளை அடையாளம் காண்பது மனநல கோளாறுகளைத் தடுக்க பயனுள்ளதாக இருக்கும் எனக் கூறினார். இந்த நிகழ்ச்சியில் 50க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

## சிறு புஷ்ப பால பவன்

குழந்தைகளின் நலனுக்கான திட்டப் பார்வையிடல் CTWWC திட்டக் குழுவும் KKSSS துணை இயக்குநரும் இணைந்து நவம்பர் 26 ஆம் தேதி, முக்கூட்டுக்கல்லில் அமைந்துள்ள சிறு புஷ்ப பால பவனை பார்வையிட்டனர். இந்த பார்வையிடல், சிறுபுஷ்ப பாலபவன் குழந்தைகள் பாதுகாப்பு மையத்தின் நிர்வாகத்தை குறித்து அறியவும், குழந்தைகளின் தற்போதைய நிலை மற்றும்

குழந்தைகளுக்கு சிறந்த பராமரிப்பை வழங்குவதில் இணைந்து பணியாற்றவுமே நடைபெற்றது. மையத்தின் பொறுப்பாளர், அருட்சகோதரி. ஜோஷி அவர்கள் மையத்தின் வரலாறு, பணிகள் மற்றும் குழந்தைகளின் தினசரி வாழ்க்கைமுறை குறித்த விவரங்களை பகிர்ந்துகொண்டார். 1990ஆம் ஆண்டில் தொடங்கிய இந்த மையம் தற்போது JJ- சட்டத்தின் கீழ் 13 குழந்தைகளை பாதுகாக்கிறது. இதில் நால்வர் முழுமையாகத் தாய்தந்தையற்றோர் மற்றும் ஒன்பது குழந்தைகள் ஒற்றை பெற்றோர்




உடையவர்கள், இவர்கள் ஒன்பது பேரும் விடுமுறையின்போது தங்கள் வீடுகளுக்குச் சென்று திரும்புகின்றனர் என்றும் குழந்தைகள் குறித்த பல கருத்துகளை பகிர்ந்து கொண்டார். CTWWC குழு உறுப்பினர், குழந்தைகளை குடும்ப அடிப்படையிலான பராமரிப்பில் மாற்றும் முயற்சிகளின் முக்கியத்துவத்தை விளக்கினர். சிறு புஷ்ப பால பவன்: KKSSS-இன் CTWWC திட்டத்தில் இணைந்த முதல் மையமாகும். இந்த நிகழ்வு குழந்தைகள் நலனுக்கான ஒருங்கிணைந்த முயற்சிகளை உறுதிப்படுத்தியது. சிறு புஷ்ப பால பவன் குழந்தைகளின் எதிர்காலத்தை ஒளிரச் செய்ய CTWWC திட்டத்துடன் இணைந்து செயல்பட பரிந்துரைக்கப்பட்டது.

## குழந்தைகள் தின விழிப்புணர்வுப் பேரணி

குழந்தைகள் தினத்தை முன்னிட்டு நவம்பர் 14, 2024 அன்று, மாவட்ட

குழந்தைகள் பாதுகாப்பு பிரிவு நடத்திய விழிப்புணர்வு பேரணி நாகர்கோவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. இதில் கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பாக CTWWC திட்டப் பணியாளர்கள் கலந்து கொண்டனர். இந்தப் பேரணியானது மக்களிடையே பெரும் உற்சாகத்தையும்




விழிப்புணர்வையும் ஏற்படுத்தியது. இந்த சிறப்பான நிகழ்வை மாவட்ட ஆட்சியர் திருமதி அழகு மீனா அவர்கள் தொடங்கி வைத்தார். குழந்தைகள் உரிமைகள், கல்வி, பாலியல் திருமணத்துக்கு எதிர்ப்பு மற்றும் குழந்தைத் தொழில் ஒழிப்பின் அவசியத்தை வலியுறுத்திய அவரது உரை, அனைவரின் மனங்களிலும் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. நகரின் முக்கிய வீதிகளில் நடைபெற்ற இந்த பேரணியில் மாணவர்கள், ஆசிரியர்கள், சமூகசேவை சங்கப் பணியாளர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் உற்சாகமாக பங்கேற்று, உறுதியான கோஷங்களின் மூலம் குழந்தைகள் நலனுக்கான விழிப்புணர்வை பரப்பினர்.

SLB பள்ளி வளாகத்தில் இறுதியாக முடிவடைந்த நிகழ்வில், குழித்துறை முழு வளர்ச்சி சங்க உறுப்பினர்கள் விழிப்புணர்வு நாடகத்தை அரங்கேற்றினர். இந்த நிகழ்வு குழந்தைகள் எதிர்கொள்ளும் சவால்களை வெளிக்கொண்டு, கல்வியின் முக்கியத்துவத்தையும் உரிமைகளையும் சிறப்பாக விளக்கியது. முற்றிலும், குழந்தைகள் நலனுக்கான விழிப்புணர்வை அதிகரிக்கும் வகையில், இந்தப் பேரணி சமூகத்தில் உள்ள மக்களை உற்சாகமூட்டும் வகையில் அமைந்தது. சமூகத்தில் குழந்தைகளின் பாதுகாப்பையும், பராமரிப்பையும் உறுதி செய்வது நம் அனைவரின் கடமை என்பதை இந்த நிகழ்வு நமக்கு எடுத்துக் கூறுகிறது.

***அருட்தந்தை எபின் பூவத்துமூட்டில்***
***செயலர்***

# மறைவட்டச் செய்திகள்

## மஞ்சாலுமூடு

### தூய மிக்கேல் அதிதூதர் ஆலயம், தெற்றிவிளை

நவம்பர் 09, சனிக்கிழமை அன்று மறைமாவட்ட நற்செய்திப் பெருவிழா மற்றும் மறைமாவட்ட தின ஆயத்தமாக சிறப்பு நற்கருணை ஆராதனை மற்றும் பாவசங்கீர்த்தனமும் நடைபெற்றது. நவம்பர் 10 ஞாயிற்றுக்கிழமை மறைமாவட்ட தினத்தை ஒட்டி நன்றி திருப்பலி மற்றும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இறுதியில் அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. நவம்பர் 17ஆம் தேதி நடைபெற்ற மிஷன் லீக் பேரணியில் பங்கிலுள்ள மிஷன் லீக் உறுப்பினர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். நவம்பர் 21 வியாழக்கிழமை மறைமாவட்ட முதல் ஆயரும் சீரோ மலபார் திருச்சபையின் முன்னாள் உயர் பேராயருமாகிய கர்தினால் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி அவர்கள் ஆலய கட்டுமான பணிகளை பார்வையிட்டு மக்களை சந்தித்து பேசினார்.

### பென்கிரி புனித பெனடிக் ஆலயம்

நவம்பர் 21,2024 மாலை 7:00 மணிக்கு மேனாள் உயர் பேராயர் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி அவர்கள் மற்றும் குருகுல முதல்வர் அவர்கள் வருகை தந்து பங்கின் வெள்ளிவிழா ஆண்டினை மெழுகுவர்த்தி ஏற்றி தொடங்கி வைத்தார்கள். பங்குத்தந்தை பீட்டர் கிழக்கேல் அவர்கள் வரவேற்பு மற்றும் நிகழ்வுகளுக்குப் பொறுப்பேற்றார். மேலும் இவ்விழாவில் அருட்தந்தை ஜேம்ஸ் பன்னாம்குழி OSB



அவர்களையும் அவரின் முன்னோடி அருட்தந்தையரின் வாழ்வும் நினைவு கூரப்பட்டது. இத்திருத்தொண்டு ஆலயம் கர்த்தினால் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி அவர்கள் தக்கலையில் ஆயராக இருந்தபோது துவங்கப்பட்டதாகும்.

# நித்திரவிளை

## புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயம் – வாறுதட்டு

செப்டம்பர் 02, 2024 அனைத்து ஆன்மாக்களின் தினத்தை முன்னிட்டு காலை 7 மணிக்கு திருப்பலி நிறைவேற்றப்பட்டது. அன்றைய தினம் மாதர் ஜோதிஸ் இயக்கத்தின் சார்பாக தடிக்காரக்கோணம் ராணி மரியா மன நல காப்பகத்தில் உள்ள சகோதரிகளுக்காக மதிய உணவு மற்றும் அவர்களுக்கு தேவையான பொருட்களும் தயார் செய்து மாதர் ஜோதிஸ் இயக்க தாய்மார்கள் மற்றும் பங்குத் தந்தை ஜோசப் சந்தோஷ் தலைமையில் கொண்டு செல்லப்பட்டன. அக்டோபர் மாதம் ஜெபமாலையின் வணக்க மாதத்தினை முன்னிட்டு மாதத்தின் கடைசி பத்து நாட்கள் ஜெபமாலை ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. அதன் நிறைவுநாள் செப்டம்பர் 03, அன்று உறவியங்களிலிருந்து பவனியாக வந்து ஆலயத்தின் பக்கத்தில் உள்ள அரங்கத்தின் முன் மனித ஜெபமாலை வடிவில் நின்று மரியன்னை மன்றாட்டு மாலை ஒப்புக்கொடுக்கப்பட்டு, பங்குத்தந்தையின் நிறைவு ஆசீருடன் நிறைவுற்றது. அதன் பிறகு அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. செப்டம்பர் 10, மறைமாவட்ட தினமாக அன்றைய நாள் அனுசரிக்கப்பட்டது. அன்றைய நாள் திருப்பலியினை இளையோர்கள் சிறப்பித்தார்கள். திருப்பலியின் பிறகு மறைமாவட்டத்தின் ஓராண்டு நிகழ்வுகளை திரை மூலமாக மக்களுக்கு காண்பிக்கப்பட்டது. அதன் பிறகு பங்கு மக்கள் அனைவருக்கும் இளையோர்கள் சார்பாக இனிப்பு வழங்கப்பட்டது. செப்டம்பர் 17, அன்று குழந்தை ஈசோ பிள்ளைகள் புனிதர்களின் வேடமணிந்து கன்னியர் இல்லத்தில் இருந்து பவனியாக வந்து காணிக்கைப் பவனியுடன் திருப்பலியில் பங்கேற்றார்கள். மறைமாவட்ட அளவில் நடந்த மிஷன் லீக் பேரணியில் மாணவர்கள் பங்கேற்றனர். நவம்பர் 24, கிறிஸ்து அரசர் பெருவிழாவினை முன்னிட்டு காலை 8 மணிக்கு திருப்பலி நடைபெற்றது. அன்றைய தினம் குழந்தை ஈசோ இயக்கத்தினை பார்வையிடுவதற்காக சீனி விளை பங்கிலிருந்து இரண்டு ஆசிரியர்கள் வருகை தந்து இயக்கத்தை பார்வையிட்டார்கள். மாலை 4 மணிக்கு திருவிழாவினை முன்னிட்டு தந்தையர் இயக்கத்தின் சார்பாக பங்கை சார்ந்த அறுபது வயதிற்கு மேற்பட்ட முதியோர்களை கவுரவிக்கும் விதமாக சிறப்பு நிகழ்வுகள் நடைபெற்றன. அதன்பிறகு அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்பட்டது.



செப்டம்பர் 27, மாலை 5:30 மணிக்கு திருப்பலி நடைப்பெற்றது. அதனைத் தொடர்ந்து, திருவிழாவிற்கு ஆயத்தமாக, தியான உரை, நற்கருணை

ஆராதனை மற்றும் பாவ சங்கீர்த்தனம் நடைபெற்றது.

### புனித அந்தோனியார் ஆலயம் – வயலங்கரை



புனிதர்களின் திருநாளை சிறப்பிக்கும் விதமாக குழந்தை ஈசோ இயக்கம் சார்பில் புனிதர்கள் போல் வேடம் அணிந்து வந்து திருப்பலியை குழந்தைகள் சிறப்பித்தனர். குழந்தை ஈசோ இயக்க வழிகாட்டி அருட்சகோதரி எல்சின் ASMI அவர்களின் பெயர் கொண்ட புனிதரின் விழா குழந்தைகள் தலைமையில் நடைபெற, மாணவச் செல்வங்கள் அருள் சகோதரி அவர்களுக்கு பரிசு வழங்கி மகிழ்ந்தனர்.

### கிறிஸ்து அரசர் ஆலயம் – கிறிஸ்துராஜபுரம்

செப்டம்பர் 10, அன்று அனைத்து புனிதர்களின் திருநாள் மற்றும் மறைமாவட்ட தினத்தை முன்னிட்டு சிறப்பு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. பங்கின் குடும்ப விழாவின் ஆயத்தமாக நவம்பர் 15ஆம் தேதி முதல் 17ஆம் தேதி முடிய மூன்று நாட்கள் நற்செய்தி பெருவிழா நடைபெற்றது. மார்த்தாண்டம் மறைமாவட்ட தியான குரு அருட்தந்தை ஜினிற்றோ அவர்கள் நற்செய்தி பெருவிழாவை வழிநடத்தி சிறப்பித்தார்கள். 18ஆம் தேதி இடுக்கி மறை மாவட்ட ஆயர் மேதகு ஜாண் நெல்லிக்குந்நேல் அவர்கள் கொடியேற்றி திருவிழா திருப்பலி துவக்கி வைத்தார்கள். 20ம் தேதி நமது முன்னாள் ஆயர் கர்தினால் ஜார்ஜ் ஆலஞ்சேரி அவர்கள் வருகை தந்து திருப்பலி ஒப்புக் கொடுத்து ஜெபித்து மக்களுடன் உரையாடி மகிழ்ந்தார். 24ஆம் தேதி நமது மறை மாவட்ட மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் இராசா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. விழா நாட்களில் திருப்பலியும் ஜெபமாலையும் நவநாளும் நடைபெற்றது. பங்கின் பக்த இயக்கங்கள் மற்றும் உறவியங்கள் ஆண்டுவிழாவும் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. குறிப்பாக இத்திருவிழா நாட்கள் மக்களுக்கு மிகவும் ஆசிர்வாதமாக அமைந்தது.

### புனித அமல மரியா ஆலயம், சீனிவிளை

செப்டம்பர் 10 அன்று குழந்தை ஈசோ மாணவர்கள் புனிதர்களின் வேடமணிந்து திருப்பலியில் கலந்துகொண்டு ஜெபித்தனர். மறைமாவட்ட தினத்தை முன்னிட்டு சிறப்பு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு அனைவருக்காகவும் ஜெபித்து அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

## களியல்

### புனித மரியன்னை ஆலயம், களியல்

களியல் புனித மரியன்னை ஆலயத்தில் நவம்பர் 10, 2024 அன்று மாலை 5 மணிக்கு மறைமாவட்ட தினம் கொண்டாடப்பட்டது.

புனித சாவறா குரியாக்கோஸ் எலியாஸ் மற்றும் புனித எவுப்பிராசியா ஆகியோர் புனிதர்களாக உயர்த்தப்பட்டதன், 10ஆம் ஆண்டு நிறைவு விழா, நவம்பர் 24 அன்று கொண்டாடப்பட்டது.

### காரோடு புனித சூசைப்பர் ஆலயம்

காரோடு புனித சூசைப்பர் ஆலயத்தின் பெற்றோர் ஆசிரியர் மற்றும் மாணவர்களின் கூட்டமானது பங்குதந்தை ஜெஸ்டின் சுதீஷ் அவர்களின் தலைமையில் 2024, நவம்பர் 10 அன்று திருப்பலிக்கு பின் நடைப்பெற்றது. பங்குதந்தை ஒவ்வொரு மாணவர்களின் விடைத்தாள்களையும் பார்வையிட்டு, ஆலோசனைகள் வழங்கி ஊக்குவித்தார். அனைத்து புனிதர்களின் தினத்தை கொண்டாடும் விதமாக குழந்தை ஈசோ இயக்கம் சார்பாக நவம்பர் 17 அன்று குழந்தைகள் தங்களுக்கு விருப்பமான புனிதரின் வேடமணிந்து திருப்பலிக்கு பவனியாக வந்தனர். திருப்பலி முடிந்ததும் பங்கேற்ற அனைத்து குழந்தைகளுக்கும் பங்குத்தந்தை அவர்கள் பரிசுகள் வழங்கினார். நவம்பர் 24 ஞாயிற்றுகிழமை களியல் பங்கிலிருந்து குழந்தை ஈசோ இயக்க பொறுப்பாளர் திருமதி அனிஷா அவர்களால், இயக்கத்தின் செயல்பாடுகள் மற்றும் ஆவணங்கள் பார்வையிடப்பட்டது..

## படந்தாலுமூடு

### திரு இருதய மறைவட்ட ஆலயம், படந்தாலுமூடு

மறைமாவட்ட அளவிலான தியானத்திற்கு தயாரிக்கும் விதமாக செப்டம்பர் 01, 2024 அன்று மாலை 6 மணிக்கு திருப்பலியும் அதைத்தொடர்ந்து ஒரு மணி நேரத் தியானமும் நடைபெற்றது. தியானத்தை அருட்தந்தை மிஜோ புத்தன் புரைக்கல் அவர்கள் வழி நடத்தினார்கள். செப்டம்பர் 10, அன்று 27ஆவது மறை மாவட்ட தினமானது துணைப்பங்குதந்தை ஜோஸ் புரையிடத்துக்குந்நேல்

அவர்களால் குத்து விளக்கேற்றி துவங்கி வைக்கப்பட்டது. திருப்பலிக்கு பின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றது. செப்டம்பர் 23, அன்று மறைக்கல்வி மாணவர்களுக்கான ஒருநாள் இன்ப சுற்றுலா நடைபெற்றது. அனைத்து புனிதர்கள் தினத்தை முன்னிட்டு குழந்தை ஈசோ இயக்கம் மாணவர்கள் புனிதர்கள் வேடமணிந்து திருப்பலியில் பங்கேற்றார்கள். செப்டம்பர் 17, அன்று நடைபெற்ற மிஷன் லீக் பவனியில் அனைத்து மாணவர்களும் கலந்து கொண்டார்கள். செப்டம்பர் 29 முதல் டிசம்பர் 01, வரை நடைபெற்ற மறை மாவட்ட தியானத்தில் ஏராளமான பங்குமக்கள் கலந்து கொண்டனர்.

### மார்ட்டின் டி போரஸ் ஆலயம், கழுவந்திட்டை

மார்ட்டின் டி போரஸ் ஆலயத் திருவிழாவானது அக்டோபர் 27 முதல் நவம்பர் 3 தேதி வரை நடைபெற்றது. அக்டோபர் 27 அன்று 5.30. மணி அளவில் செபமாலை, நவநாளும் அதன்பின் பங்குத்தந்தை செஸ்டின்செறுவேலில் அவர்களால் கொடியேற்றப்பட்டு திருவிழா ஆரம்பமானது. ஒவ்வொரு நாளும் உறவியம் வாயிலாக செபமாலையும் நவநாளும் அதை தொடர்ந்து ஆடம்பர கூட்டுத் திருப்பலியும் நடைபெற்றது. 28ஆம் தேதி முதல் 30ஆம் தேதி வரை நற்செய்தி பெருவிழா அருட்தந்தை சிபி அவர்களால் வழி நடத்தப்பட்டது. 31 ஆம் தேதி திருப்பலி முடிந்த பிறகு உறவியம் மற்றும் பக்த இயக்கங்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. செப்டம்பர் 11, அன்று ஆயர் தலைமையில் ஆடம்பரத் திருப்பலி நடைபெற்றது. செப்டம்பர் 03, காலை இராசை திருப்பலியைத் தொடர்ந்து அன்பின் விருந்தும் நடைபெற்றது. அன்று மாலை 6.30 மணிக்கு மறைக்கல்வி ஆண்டு விழா மறைக்கல்வி இயக்குனர் அருட்தந்தை. அபிலாஷ் சேவியர் அவர்களின் முன்னிலையில் நடைபெற்றது.

## சூசைபுரம்

### ▶ புனித சூசைப்பர் மறைவட்ட தேவாலயம்

நவம்பர் 10 அன்று மறைமாவட்ட தினம் அனுசரிக்கப்பட்டது. திருப்பலி, பொதுக்கூட்டம், கலைநிகழ்வுகள் நடைபெற்றன. குறிப்பாக, குழந்தை ஈசோ இயக்க குழந்தைகள் புனிதர்களின் வேடமணிந்து அணிவகுத்து வந்தனர். நவம்பர் 17 அன்று மறைமாவட்ட மிஷன் லீக் பேரணியில் உறுப்பினர்கள் பங்கேற்றனர். நவம்பர் 21 அன்று கர்தினால் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி அவர்கள் பங்கிற்கு வருகை தந்தார். அன்று காலை நற்கருணை ஆராதனை சபையினர் கன்னியர் இல்லத்தில் வைத்து திருப்பலி நிறைவேற்றிய கர்தினால் அவர்கள் 9.30 மணிக்கு எமது A.P.J.M.பள்ளிக்கூடத்திற்கு வருகை தந்து சிறப்புரையாற்றினார்கள். பின்னர் சூசைபுரம், புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியை சென்று பார்வையிட்டார்கள். நவம்பர் 24 அன்று கிறிஸ்து

அரசர் பெருவிழா திருப்பலியானது பங்குத்தந்தை பேரருட்தந்தை ஆன்றனி ஜோஸ் அவர்கள் தலைமையில் நிறைவேற்றப்பட்டது. அன்றைய திருப்பலியை கிறிஸ்து அரசர் உறவிய மக்கள் சிறப்பித்தார்கள். திருப்பலி முடிந்த பின்னர் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. நவம்பர் 28 அன்று A.P.J.M. மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியின் பள்ளி ஆண்டு விழாவிமரிசையாக கொண்டாடப்பட்டது. விழாவிற்கு மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

### கிறிஸ்து அரசர் ஆலயம், பாலப்பள்ளம்

2024 ஆம் ஆண்டு ஆலய திருவிழாவை முன்னிட்டு நவம்பர் 8, 9, 10 ஆகிய தேதிகளில் அருள் முனைவர் ஸ்டான்லி அலெக்ஸ் OFM அவர்கள் தலைமையில் நற்செய்தி பெருவிழா நடைபெற்றது. நவம்பர் 10 ஆம் தேதி திருவிழாவை முன்னிட்டு பாடல், பேச்சு, விவிலிய வசனம் எழுதுதல் போன்ற போட்டிகள் நடைபெற்றன. மேலும், மறைமாவட்ட தினத்தை முன்னிட்டு திருப்பலி, புனிதர்கள் வேடமடைந்த குழந்தைகளின் பவனி, சிறப்பு மன்றாட்டுகள், இனிப்பு வழங்குதல் ஆகியவை நடைபெற்றன. ஆலயத் திருவிழா நவம்பர் 15 தொடங்கி 24 வரை நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை அஜின் ஜோஸ் அவர்கள் திருக்கொடி ஏற்றினார். 17 ஆம் தேதி மேனாள் உயர் பேராயர் கர்தினால் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி அவர்கள் திருப்பலி நிறைவேற்றி, முதல் திருவிருந்தும் வழங்கினார். அருட்சகோதரி ஜோதிஸ் SABS அவர்கள் துறவற வெள்ளிவிழாவிற்காக பாராட்டப்பட்டார். திருவிழாவில் தினமும் மாலையில் ஜெபமாலை, நவநாள், திருப்பலி நடைபெற்றதோடு ஒரு நாள் இராசை திருப்பலியும் நடைபெற்றது. மறைக்கல்வி மற்றும் பக்த இயக்கங்களின் ஆண்டு விழாவும் திருநாளை சிறப்பித்தது. குறிப்பாக பங்கு பொதுநிலையினர் பேரவையினர் சார்பில் ரீத்தாபுரம் பேரூராட்சி சமூகநல பணியாளர்கள் 10 பேர் கௌரவிக்கப்பட்டனர். ஒன்பதாம் நாள் திருவிழாவில் ஆடம்பர தேர்ப்பவனியும் நிறைவு நாளில் மேதகு ஆயர் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் திருப்பலி நடைபெற்றது. அன்று அன்பின் விருந்தும் நடைபெற்றது. எட்டாம் நாள் விழாவில் செண்டை- வயலின் இசை நிகழ்ச்சியும் இறுதி நாள் விழாவில் புனித தேவசகாயம் நாடகமும் பொது நிகழ்வுகளாக நடைபெற்றன.

## தக்கலை – பிலாங்காலை

### புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் பிலாங்காலை

இரண்டாவது சனிக்கிழமை நோயாளிகளுக்கான திருப்பலி தொடர்ந்து ஆராதனை நடைபெற்றது. நவம்பர் 10 ஆம் தேதி வெகு விமரிசையாக மறைமாவட்ட ஆண்டுவிழா

திருப்பலியுடன் தொடங்கி பொதுக்கூட்டம் மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டது. நவம்பர் 18 ஆம் தேதி குழந்தை இயேசு இயக்க குழந்தைகள் புனிதர்களின் வேடமணிந்து பவனியாக வந்து பங்குதந்தையிடம் ஆசி பெற்றனர்.

### ஆனையடி புனித ஜார்ஜியார் ஆலயம்

ஆனையடி புனித ஜார்ஜியார் ஆலயத்தில் மறைமாவட்ட ஆண்டுவிழா நவம்பர் 10 ம் தேதி வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. காலை 10 மணிக்கு திருப்பலி தொடர்ந்து பொதுக்கூட்டம் மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டது. பொதுக்கூட்டத்தில் ஆரம்ப காலத்தில் இப்பங்கில் மறைத்தொண்டு பணியாற்றிய சீனிவிளையை சார்ந்த திரு. பத்மநாபன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு தன் அனுபவத்தை பகிர்ந்தார்.

### புனித சவேரியார் ஆலயம் கைசாலவிளை

புனித சவேரியார் ஆலயம் கைசாலவிளை நவம்பர் 10 ம் தேதி வெகு விமரிசையாக மறைமாவட்ட ஆண்டுவிழா திருப்பலியுடன் தொடங்கி பொதுக்கூட்டம் மற்றும் காலை உணவு வழங்கப்பட்டது.

## தென்காசி மறைத்தள செய்திகள்

### மறைக்கல்வி தேர்வுகள்

இவ்வாண்டின் மறைக்கல்வி முதல் பருவத் தேர்வானது நவம்பர் மாதம் இரண்டாம் தேதி அனைத்து பங்குகளிலும் வைத்து நடத்தப்பட்டது. அனைத்து மாணவ மாணவிகளும் தேர்வில் பங்கெடுத்தனர்.

### மிஷன் லீக் இயக்கம்

2024ஆம் வருட மிஷின் லீக் இயக்கப் பவனி தக்கலை மறை மாவட்ட அளவில் நவம்பர் 17ஆம் தேதி படந்தாலுமூட்டில் வைத்து நடத்தப்பட்டது. தென்காசி மறைத்தளத்தை சார்ந்த மிஷன் லீக் உறுப்பினர்கள் 14 பேர் கலந்து கொண்டு சிறப்படைந்தனர். மிஷன் லீக் இயக்குநர் தந்தை, அனிமேட்டர் அருட்சகோதரிகளும் மாணவர்களும் இணைந்து பவனியில் பங்கெடுத்து இறை ஆசீர் பெற்றனர்.

### ஆயர் சந்திப்பு மற்றும் அருட்தந்தையர்கள் அருட்சகோதரிகளின் கூட்டம்:

ஆம்பூர் மறைத்தளத்தோடு இணைந்த ஆழ்வார்குறிச்சி என்ற இடத்தில் நவம்பர் 25-ஆம் தேதி மாலை 5. 30 மணியளவில் கூட்டமானது நடத்தப்பட்டது. புதியதாக வாடகை வீடு எடுத்து மறைத்தள பணியை ஆரம்பித்த அருட்தந்தை தாமஸ் தக்கலை அவர்கள் தங்கும் வாடகை வீடு ஆயர் அவர்களால் அர்ச்சிக்கப்பட்டது. தொடர்ந்து கூட்டமானது செபமாலையுடன் ஆரம்பமானது. மறைத்தள பணிகளின் செயல்பாடுகள் திட்டங்கள் போன்றவற்றை பற்றி கலந்துரையாடப்பட்டது. ஆயர் அவர்கள் வாழ்த்துக்களை கூறி மறைத்தள பணிகளில் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று அறிவுரை கூறி அனைவரின் சிறப்பான பணிகளுக்கு பாராட்டுகளை தெரிவித்தார். இறுதி ஆசீர்வாதத்திற்கு பிறகு அன்பு விருந்துடன் கூடுகையானது நிறைவுற்றது.

### புலரி சமூக சேவை மையம்




தென்காசி, புலரி சமூக சேவை மையம் வழியாக குழந்தைகளுக்கு மாலை நேரக்கல்வி நடைபெற்று வருகிறது. நவம்பர் 14ஆம் தேதி குழந்தைகள் தின விழாவை சிறப்பிக்கும் வகையில் இயக்குனர் அருட்தந்தை ஆண்டனி மகேஷ் அவர்களின் தலைமையில் குழந்தைகளுக்காக பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. நவம்பர் 20\21\22 தேதிகளில் மாவட்ட தொழில் மையத்தோடு இணைந்து தொழில் முனைவர் பயிலரங்கம் நடத்தப்பட்டது. இதில் ஏராளமானோர் பங்கு பெற்று சிறப்படைந்தனர்.

**தகவல் சேகரிப்பு : திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா | திருமதி ஷைலா | திருமதி ராஜிதா**

# Wayanad rehabilitation fund Collection - 2024

| Name of Church / Institutions | Amount |
|---|---|
| Pallikonam, Sacred Heart Church | 10000 |
| Varuthattu, St. Xavier's Church | 6000 |
| Mathapuram, St. Thomas Church | 672 |
| Anayadi, St. George Church | 1000 |
| Kattathurai, St. Michael's Church | 3000 |
| Padanthalumoodu, Sacred Heart Forane Church | 14610 |
| Muzhucode, St. Thomas Church | 40000 |
| Fathimapuram, Fathima Matha Church | 2218 |
| Thakkalivilai, Holy Family Church | 20000 |
| Vayalinkarai, St. Antony's Church | 10000 |
| Perumchilampu, St. Thomas Church | 8320 |
| Pilankalai, Little Flower Forane Church | 41206 |
| Kaisalavilai, St. Xavier's Church | 8025 |
| Mezhacode, St. Francis Assisi Church | 7500 |
| Kaliyal, St. Mary's Church | 27200 |
| Penu, St. Mary's Church | 6000 |
| Thuckalay, St. Mary's Church | 10000 |
| Karode, St. Joseph's Church | 10000 |
| Mankarai, St. James Church | 9280 |
| Kazhuvanthittai, St. Martin de Porres Church | 6450 |
| Mukkoottukal, Holy Family Church | 20000 |

| | |
|---|---|
| Kalluvilai, Mother Theresa Church | 3250 |
| Netta, St. Thomas Church | 20000 |
| Netta, St Thomas School | 5000 |
| Muzhucode, Mount Carmel Matric Hr. School | 100000 |
| Palappallam, Christ the King Church | 44000 |
| Kattathurai, St. Michael's School | 85000 |
| Christurajapuram, Jeya Matha Matric School | 40000 |
| Pilankalai, St Joseph's High School | 35000 |
| Palugal, St. Thomas Church | 5000 |
| Munchirai, St. George Shrine Church | 16500 |
| Pilankarai, Carmel School | 80000 |
| Kazhuvanthittai, Sacred Heart Matric School | 25000 |
| Chenamcode, Lourdu Matha Church | 2000 |
| Kulasekaram, St. John Paul II Mission | 4000 |
| Mezhacode, St Francis Matriculation School | 35000 |
| Kanyakumari, Carmal Matha Matric Hr. School | 100000 |
| Thirunelveli, St George Mission | |
| Arukani, St Holy Family | 5055 |
| Bengiri, St. Benedict Church | 11000 |
| Marappady, St Thomas Church | 13600 |
| Kuttaikodu, St Chavara Kuriyakose Church | 6180 |
| Athencode, Maria Gorrati Church | 4500 |
| Kunnuvilai, St Joseph's Church | 1000 |

| | |
|---|---|
| Padanthalumoodu, S. Heart Hr Sec School | 50000 |
| Christurajapuram, Christ Raja Church | 6000 |
| Annikarai, St Mathew's Church | 17000 |
| Cheenivialai, Amala maria Church | 3260 |
| Pudur, St Thomas Church | 600 |
| Thadikkarankonam, St Joseph's Church | 680 |
| Vellambi, St. Michaels Mission | 100 |
| Killiyoor, Deva Matha Church | 10000 |
| Manjalumoodu, Little Flower Forane Church | 35000 |
| Kulasekharam, John Paul Hr. Sec School | 50000 |
| Soosaipuram, St. Joseph's Forane Church | 20280 |
| Soosapuram, APJM Matriculation School | 123969 |
| Vattakottai, Health Mission Service Centre | 25000 |
| Madurai, St Mary's Church | 100020 |
| Paraicode, Christ the King Church | 4000 |
| Anamukham, Loreto Matha Church | 300 |
| Pathukani, St. Thomas Church | 400 |
| Malaicode, Holy Cross Church | 12000 |
| Thettivilai, St. Michael's Church | 5000 |
| Vanchi Nagar, St. Mary's Church | 1000 |
| Nagercoil, St. Alphonsa School | 100000 |
| Nagercoil, St. Alphonsa Church | 50000 |

**Fr. Johnsilal Arakkaparambil Finance Officer**

# MONTHLY AGENDA –DECEMBER 2024

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | **Sun** | 09.00 am | Eparchial Bible Convention @ Padanthalummoodu |
| 2 | Mon | 10.00 am | Garments Directors meeting @ Bishop's House |
| 3 | Tue | 10.00 am<br>10.00 am | Choir members Gathering @ Padanthalummoodu<br>**SINAI :**Intercessory Prayer @ Kalluvilai |
| 5 | Thur | 10.00 am | Priest' Conference @ Sangamam |
| 6 | Fri | 10.00 am | **SINAI :** One Day Retreat @ Vattakottai |
| 7 | Sat | 02.00 pm<br>03.30 pm | Mariavin Senai Christmas celebration @ Sangamam<br>CAT/ KII Christmas gathering @ Kalluvilai |
| 8 | **Sun** | 02.30 pm<br>04.00 pm | **VC : Unit Christmas gathering in foranes HEALTH: Doctors meet at St.Xavier's college @ Chunkankadai** |
| 9 | Mon | 05.30 pm | **EC:** UCC central monthly meeting @ Kottar |
| 10 | Tue | 10.00 am | **SINAI :** Intercessory Prayer @ Kalluvilai |

| | | | |
|---|---|---|---|
| 11 | Wed | 10.00 am<br>07.00 pm | Christmas Gathering with Head of The Institutions @ Sangamam<br>Christmas Celebration with Director and Staffs @ Kozhiporvilai |
| 12 | Thur | 03.00 pm | CML Christmas celebration @ Bishop's House |
| 14 | Sat | 09.00 am<br>10.03 pm<br>02.00 pm<br>02.30 pm<br>06.30 pm | Family Apostolate smart Christmas celebration @ Kalluvilai<br>**EC:** UCC central gathering @ Muttam<br>Educare students Christmas Gathering @ Kalluvilai<br>**EC :** UCC Christmas Gathering @ Karungal<br>**SINAI :** Evening Retreat @ Malaicode |
| 15 | **Sun** | **01.00 pm**<br>**02.00 pm**<br>**04.00 pm** | **SMYM : Christmas Celebrations @ Manjalummoodu VC : Christmas gathering @ Padanthalummoodu PULARI : Inter- Religious Christmas Celebration @ Border** |
| 16 | Mon | 04.00 pm<br>05.00 pm | Tenkasi Christmas Gathering @ Pudur<br>**EC :** UCC Karungal Vattaram Meeting @ Karungal |
| 17 | Tue | 05.00 pm<br>10.00 am | Christmas gathering for Presbyterium @ Sangamam<br>Intercessory Prayer @ Kalluvilai |

| | | | |
|---|---|---|---|
| 18 | Wed | 10.00 am<br>05.00 pm | Meeting with Head of the Charitable institutions @ Bishop's House<br>Minor Seminary & seeds Christmas celebration @ Mukoottukal |
| 20 | Fri | 06.30 pm | **SINAI :** Evening Retreat @ Palappallam |
| 21 | Sat | 10.00 am<br>04.30 pm<br>06.00 pm | CRI Christmas gathering @ Kalluvilai<br>Christmas Gathering with Irai Arul Staffs @ Padanthalummoodu<br>First Death Anniversary Qurbana of Rev. Fr. John Thekkel @ Mezhacode |
| **22** | **Sun** | **04.00 pm**<br>**06.00 pm** | **HEALTH : Medical camp @ Chennamcodu Christmas celebration with Neighborhoods @ Bishop's House** |
| 23 | Mon | 10.00 am<br>11.00 am | **KKSSS:** Staff Christmas Celeberation<br>Major Seminarians Christmas gathering @ Sangamam |
| 24 | Tue | 10.00 am | **SINAI:** Intercessory Prayer @ Kalluvilai |
| **25** | **Wed** | | **MERRY CHRISTMAS** |
| 27 | Fri | 08.30 am<br>08.30 am | **CAT :** Forane Level Bible Fest Competition of Arukany Forane @ Arukany<br>**CAT :** Forane Level Bible Fest Competition of Manjalumoodu Forane @ Mukkoottukal |

| | | | |
|---|---|---|---|
| 28 | Sat | 08.30 am<br>10.00 am | **CAT :** Forane Level Bible Fest Competition of Nithiravilai Forane @ Christurajapuram<br>**SINAI:** One Day Retreat @ Kalluvilai |
| 29 | **Sun** | **08.00 am**<br>**02.00 pm** | **Inauguration of the Jubilee Year 2025 @ Munchirai Kids day celebrations @ Parish Level** |
| 30 | Mon | 08.30 am<br>08.30 am | **CAT :** Forane Level Bible Fest Competition of Soosaipuram Forane @ Soosaipuram<br>**CAT :** Forane Level Bible Fest Competition of Thuckalay-Pilankalai Forane @ Kattathurai |
| 31 | Tue | 08.30 am<br>08.30 am<br>10.00 am | **CAT :** Forane Level Bible Fest Competition of Padanthalumoodu Forane @ Padanthalummoodu<br>**CAT :** Forane Level Bible Fest Competition of Kaliyal Forane @ Kaliyal<br>**SINAI:** Intercessory Prayer @ Kalluvilai |

**Fr. Thomas Powathtuparampil,**
**Vicar General**

## BISHOP'S ENGAGEMENTS – DECEMBER 2024

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Sun | **09.00 am** | Padanthalummoodu : Eparchial Bible Convention |
| 2 | Mon | 10.00 am | Thuckalay : Meeting with garments unit Directors |
| 3 | Tue | 09.30 am | Padanthalummoodu : Choir members Gathering |
| | | 05.00 pm | Kulashekaram : School Annual Day |
| 4 | Wed | 10.00 am | Thuckalay : Bishop’s House |
| | | 05.00 pm | Arukani : School Annual Day |
| 5 | Thur | 10.00 am | Sangamam : Priest’ Conference |
| | | 05.00 pm | Christurajapuram : School Annual Day |
| 6 | Fri | 04.00 pm | Cheruvalli : Feast Day Qurbana |
| 7 | Sat | 02.00 pm | Sangamam : Mariavin Senai Christmas celebration |
| | | 03.30 pm | Kalluvilai : CAT/ KII Christmas gathering |
| | | 06.00 pm | Varuthattu : Feast Day Qurbana |
| 8 | Sun | 09.00 am | Chunkankandai : Catholic Doctors’ Meet >> Chennai |
| 9 | Mon | 09.00 am | Vellore : Episcopal Ordination >> Thuckalay |
| 10 | Tue | 10.00 am | Thuckalay : Bishop’s House |
| 11 | Wed | 10.00 am | Sangamam : Christmas Gathering with Head of The Institutions |
| | | 07.00 pm | Kozhiporvilai : Christmas Celebration with Director and Staffs |
| 12 | Thu | 10.00 am | Thuckalay : Curia Meeting |
| | | 05.00 pm | Bishop’s House: CML Christmas celebration |

| | | | |
|---|---|---|---|
| 13 | Fri | 06.00 am<br>03.00 pm | Soosaipuram : Holy Qurbana at SABS Provincial House<br>Thuckalay : CMC Provincial House |
| 14 | Sat | 09.00 am<br>10.30 am<br>02.00 pm | Kalluvilai : Family Apostolate smart Christmas celebration<br>Muttam : UCC Christmas celebration<br>Kalluvilai : Educare students Christmas Gathering >> Madhurai |
| 15 | Sun | 08.00 am<br>04.00 pm | Madhurai : Christmas gathering >> Cumbum Cumbum : Christmas gathering at Theni >> Tenkasi |
| 16 | Mon | 04.00 pm | Pudur : Tenkasi Christmas Gathering |
| 17 | Tue | 05.00 pm | Sangamam : Christmas gathering for Presbyterium |
| 18 | Wed | 10.00 am<br>05.00 pm | Bishop's House : Meeting with Head of the Charitable institutions<br>Mukoottukal : Minor Seminary & seeds Christmas celebration |
| 19 | Thu | 10.00 am | Moolamattom : Christmas gathering |
| 20 | Fri | 10.30 am<br>05.00 pm | Kalluvilai : Marriage preparation Course<br>Trivandrum : Nirmala school Kowadiar |
| 21 | Sat | 10.00 am<br>02.00 pm<br>04.30 pm<br>06.00 pm | Kalluvilai : CRI Christmas gathering<br>Nithiravilai : Karunaillam Alumni gathering<br>Padanthalummoodu : Christmas Gathering with Irai Arul Staffs<br>Mezhacode : First Death Anniversary Qurbana of Rev. Fr. John Thekkel |

| | | | |
|---|---|---|---|
| 22 | Sun | 03.00 pm<br>05.00 pm<br>06.00 pm | Bishop's House : SMYM Christmas Celebration Kandanvilai : Jubilee celebration Bishop's House : Christmas Christmas gathering Sangamam. |
| 23 | Mon | 11.00 am<br>01.00 pm<br>6.00 pm | Christmas gathering.<br>Bishop's House : Community Christmas gathering .<br>celebration with Neighborhoods Sangamam : Major Seminarians. |
| 24 | Tue | 07.00 pm | Mathapuram : Christmas Holy Qurbana |
| 25 | Wed | 03.00 pm | Neyyatinkarai : Christmas gathering |
| 26 | Thu | 10.00 am | Thuckalay : Bishop's House |
| 27 | Fri | 10.00 am<br>03.00 pm<br>05.30 pm | Killiyoor : Marriage Holy Qurbana<br>Thoothur : Siver Jubilee celebrations<br>Arukani : Feast day Qurbana |
| 28 | Sat | 10.00 am | Thuckalay : Benefactors's Visit |
| 29 | Sun | 08.00 am | Munchirai : Inauguration of the Jubilee Year 2025 |
| 30 | Mon | 10.00 am<br>05.00 pm | Champakulam : Jubilee Celebration<br>Ernakulam : House Blessing |
| 31 | Tue | 10.00 am | Thuckalay : Bishop's House |

FR. LIJU MATHEW, SECRETARY TO BISHOP



Feast Mass , November 24, 2024,
Christhurajapuram



Tenkasi Mission Meet, November 25, 2024, Ambur



10th Anniversary of the Canonisation of St. Chavara Kuriakose Elias
& St. Euphrasia, November 24, 2024, Kaliyal



CHURCH CONSECRATION, NOVEMBER 16, 2024,
PARAICODE



MISSION LEAGUE RALLY, NOVEMBER 17, 2024,
THIRUTHUVAPURAM TO PADANTHALUMOODU

**For Private Circulation Only**

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570